## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 23/2018 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | அய்யப்பன் | நாள் | 26.07.2023 |
| தகப்பனார் பெயர் | சிவசாமி | | |

**பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

23) இவ்வழக்கில் எங்கள் குடும்ப சொத்துக்கள் குறித்து என் பெரிய தாத்தா, குருசாமி மற்றும் என்னுடைய தாத்தா சோமசுந்தரம் ஆகியோர்களிடையேயும் மேற்படி நபர்களின் வாரிசுகளிடையேயும் பாகபிரிவினை செய்யப்பட்டு தனித்தனியாக அனுபவிக்கப்பட்டு வரும் நிலையில், மேற்படி அனைத்து வாரிசுதாரர்களையும் இவ்வழக்கில் நான் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால், சரிதான். என் சுவாதீனத்திற்கு இடையூறு செய்தவர்களை மட்டும் தான் தரப்பினர்களாக சேர்த்துள்ளேன்.

24) மேற்படி என் பாட்டனார் சோமசுந்தரத்துடன் உடன் பிறந்த சகோதரர்கள் மொத்தம் 3 நபர்கள். அவர்களில் லிங்குசாமி மற்றும் மயில்சாமி ஆகியோர்கள் என் பாட்டனாரின் இளைய சகோதரர்கள் ஆவார்கள். மேற்படி லிங்குசாமி மற்றும் மயில்சாமி ஆகியோரின் வாரிசுகளை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால், சரிதான். என் சுவாதீனத்திற்கு இடையூறு செய்தவர்களை மட்டும் தான் தரப்பினர்களாக சேர்த்துள்ளேன்.

25) மேற்படி அனைத்து வாரிசுகளையும் இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்த்தால் உண்மை தெரிந்துவிடும் என்பதால், மேற்படி நபர்களை மறைத்து நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல.

26) ச.எண்.194-ற்குரிய பட்டா எண்.843 என்றால், சரிதான். மேற்படி பட்டாவில் யார் யார் எல்லாம் கூட்டுப்பட்டாதாரர்களாக வருகிறார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், அதுகுறித்து எனக்கு சரியாக தெரியாது. மேற்படி பட்டாவில் கூட்டுப்பட்டாதாரர்களாக உள்ள நபர்களை இவ்வழக்கில் நான் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால், சரிதான். என் சுவாதீனத்திற்கு இடையூறு செய்தவர்களை மட்டும் தான் தரப்பினர்களாக சேர்த்துள்ளேன்.

27) அவ்வாறு என் பாட்டனார் சோமசுந்தரத்தின் சகோதரர்களையும், அவரது வாரிசுகளையும், மேற்படி பட்டா எண்.843 ல் கூட்டுப்பட்டாதாரர்களாக உள்ள நபர்களையும் இவ்வழக்கில் சேர்க்காததால் அவசியமான தரப்பினர்களை சேர்க்காத காரணத்தினால் இவ்வழக்கு பாதிக்கப்படுகிறது என்றால், சரியல்ல.

28) இவ்வழக்கில் காண்பிக்கப்பட்டுள்ள தடவழி உண்மையில் நிலையில் இல்லை என்றாலும், என்னுடைய சொத்திற்கு செல்வதற்கு மாற்று தடவழி உள்ளது என்றாலும், அதைத்தான் நான் பயன்படுத்தி வருகிறேன் என்றாலும், பிரதிவாதிகளுக்கு இடையூறு செய்யவேண்டும் என்ற எண்ணத்தில் கற்பனையாக ஒரு தடவழியை உருவாக்கி அதில் எனக்கு உரிமை உள்ளதாகவும், அதை பிரதிவாதிகள் தடுப்பதாகவும் கூறி பொய்யான சங்கதிகளின் அடிப்படையில் இவ்வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல.

29) அவ்வாறு தாவா சொத்தில் நான் கூறுவதுபோல் தடவழி உள்ளதை காண்பிக்க கிரய ஆவணங்களோ, வருவாய் ஆவணங்களோ எதையேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், பிரதிவாதிகள் என் தந்தைக்கு சொத்தை விற்கும்போது எழுதிக்கொடுத்த பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். அதில் மாமுல் தடவழி உள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது. நான் சொல்வது போல் பிரதிவாதிகள் எனக்கு எந்த ஆவணத்தையும் எழுதிக்கொடுக்கவில்லை என்றாலும், வழக்கிற்காக நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும், சரியல்ல.

30) ச.எண்.194 ல் உள்ள நிலத்திற்கு வடபுறமாக மேச்சேரியிலிருந்து கூணாண்டியூர் செல்லும் தார்சாலை செல்கிறது என்றால், சரிதான். மேற்படி தார்சாலைக்கு தெற்குபுறமாக தென்வடல் பாதை ஒன்று ச.எண்.194 ல் உள்ள நிலத்திற்கு செல்கிறது என்றாலும், மேற்படி வழிதடத்தை தான் என் பெரிய தாத்தா வாரிசுகளும், நாங்களும், என் சின்ன தாத்தா வாரிசுகளும் பயன்படுத்தி வருகிறோம் என்றால், சரிதான். ஆனால், மேற்படி தடம் பிரதிவாதிகளின் காட்டை ஒட்டி செல்வதால், மேற்படி வழித்தடத்தின் இருபுறமும் பிரதிவாதிகளின் நிலம் உள்ளதால் அந்த வழித்தடத்தை அவர்கள் அடைத்து விட்டார்கள். அதனால் என்னுடைய நிலத்திற்கு நான் செல்ல முடியவில்லை.

31) நான் சொல்வதுபோல் மேற்படி வழிப்பாதையை ஒட்டி பிரதிவாதிகளுக்கு எந்த நிலமும் இல்லை என்றாலும், அங்கு குருசாமி, பச்சியண்ணன், தேவன், ஆகியோர்களுக்கு தான் நிலம் உள்ளது என்றாலும், அதனால் பிரதிவாதிகளின் காட்டை ஒட்டியுள்ள வழித்தடத்தை அவர்கள் அடைப்பதாக நான் சொல்வது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால், சரியல்ல.

32) கடந்த 28.09.2022 ம் தேதியில் இவ்வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்னிட்டு என் தந்தை சிவசாமிக்கு, குருசாமி மகன் தேவன் என்பவர் மேச்சேரி சார்பதிவாளர் அலுவலகத்தில் விவசாய காரிய தடவழி கிரயம் என்ற பெயரில் ச.எண்.194/2 ல் உள்ள 2–1/2 செண்ட் நிலம் தொடர்பாக ஒரு தடவழி கிரய ஆவணம் ஏற்படுத்தியுள்ளார் என்றால், சரிதான். மேற்படி கிரயப்பத்திரத்தின் மூலம் என் தந்தை அவரது பெயரிலுள்ள காட்டிற்கு போய் வருவதற்கு தேவையான வழித்தடத்தை மேற்படி தேவன் என்பவரிடமிருந்து கிரயம் பெற்றுக்கொண்டு என் தந்தையின் நிலத்தில் இருந்து வழித்தடத்தை தேவன் என்பவரது நிலத்திற்கு செல்வதற்காக தடவழி குறித்து கிரயம் அளித்துள்ளார். ஆனால் மேற்படி வழித்தடத்திற்கும் தற்போது இவ்வழக்கிலுள்ள வழித்தடத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை.

33) நான் சொல்வது தவறானது என்றாலும், இவ்வழக்கை நான் தாக்கல் செய்த போது இவ்வழக்கின் ச.எண்.194 ஆக மட்டுமே இருந்தது என்றும், இவ்வழக்கு நிலுவையில் இருக்கும் போது மேற்படி ச.எண்.194 உட்பிரிவு செய்யப்பட்டுவிட்டது என்றும், அவ்வாறு உட்பிரிவு செய்யப்பட்ட ச.எண்.194/2 ல் உள்ள நிலம் தொடர்பாகத்தான் மேற்படி வழித்தட கிரயப்பத்திரம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றாலும், அதனால் அதிலுள்ள வழித்தடம் தான் என் பெயரிலுள்ள ச.எண்.194 ல் உள்ள நிலத்திற்கும் வழித்தடம் என்றால், சரியல்ல.

34) மேற்படி வழித்தட கிரயப்பத்திரத்தில் மேற்படி 2–1/2 செண்ட் நிலத்திற்கான செக்குபந்தி விவரமானது சிவசாமி நிலத்திற்கும் வடக்கு, கிழமேலாக செல்லும் தார் ரோட்டிற்கும் தெற்கு, தேவன் நிலத்திற்கும் கிழக்கு மற்றும் மேற்கு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். அதன் மத்தியில் 18 லிங்ஸ் அகலமும் மற்றும்

141 லிங்ஸ் நீளமும் 2538 சதுர லிங்ஸ் அளவும் கொண்ட வழித்தடம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். மேற்படி தடவழி வழியாக ஆடு மாடுகள், வண்டி வாகனங்கள் சென்று வர பயன்படுத்திக்கொள்ளலாம் என குறிப்பிட்டுள்ளது என்றால், சரிதான்.

35) மேற்படி விவசாய காரிய தடவழிப்பத்திரத்தில் 2ம் பிரதிவாதி சிவசாமி சாட்சி கையெழுத்து போட்டுள்ளார் என்றால், அதுகுறித்து எனக்கு தெரியாது. மேற்படி பாதை தான் நாங்கள் பயன்படுத்தும் பாதை என்றாலும், அதைதான் நாங்கள் நெடு நாட்களாக பயன்படுத்தி வருகிறோம் என்றாலும், மேற்படி பாதையை மறைத்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், சரியல்ல. எனவே இவ்வழக்கு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால், சரியல்ல.

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.